தமிழீழ அரசியல் துறை கனடா
THAMILEELA ARASIYALTHURAI CANADA
Reg-1430686-4
Email:thamileelaarasiyalthuraicanada@gmail.com
+1-905-744-8282
+1-647-989-0552

தமிழீழ அரசியல்துறை கனடா
06.07.2023.

# வெந்து தணிந்தது காடு

## திரைப்படத்திற்கான தடையும் கண்டனமும்

தமிழீழ விடுதலை போராட்டத்தின் அறத்தினை சொல்லாத படைப்புக்கள் அனைத்தும் தமிழீழ மக்களாலும் உலகத் தமிழராலும் விடுதலைப் போரட்டத்தில் பங்கேற்ற போராளிகளாலும் நிராகரிக்கப்படும். ஏனெனில் அடுத்த தலை முறைக்கு எமது போராட்டத்தின் அறத்தினை சரியாக பதிவு செய்யவேண்டிய நிர்ப்பந்தத்தில் உள்ளோம்.

மேற்படி படைப்பான வெந்து தணிந்தது காடு திரைப்படம் இலங்கை இராணுவத்தினால் புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் போராளிகளை பயன்படுத்தி இலங்கை அரசாங்கத்தின் பின்னணியில் இலங்கை திரைபட கூட்டுத்தாபனத்தின் ஒத்துழைப்புடனும் இப்படம் எடுக்கப்பட்டு வெளியிடப்பட்டது. இப்படம் உருவாக்க இயக்குனரால் நிதியுதவி கேட்கப்பட்டபோது தேசியத்தின்பால் பயணிக்கும் 200 நபர்களால் சரியான படைப்பாக இருக்கும் என நம்பி நிதி உதவி செய்யப்பட்டது. இப்படத்தின் காட்சிப்படுத்தல் மூலம் அவர்களின் நம்பிக்கை சிதைக்கப்பட்டுவிட்டது.

தற்போதைய சூழலில் இப்படத்தினை ஆய்வு செய்யும் போது இலங்கை நல்லிணக்க ஆணைக் குழுவின் வடக்கு செயற்பாட்டாளராக இருந்து பல சாட்சியங்களை இலங்கை அரசாங்கத்திற்கு எதிராக சொல்லவிடாமல் தடுத்து அவர்களுக்கு மறுமணம் தொழில் வாய்ப்பு என ஆசை காட்டி அரசிற்கு முண்டுகொடுத்து நின்றவரும் 2009க்கு பின்னர் மடைமாற்றம் செய்யப்பட்ட இலக்கிய வாதிகளில் தமிழ்சமூகத்திற்கு கோடாரிக்காம்புகளாக இருக்கக் கூடிய இலக்கியவாதிகளின் சிறுகதைகளிலும் இருந்து இத்திரைப்படத்திற்கு காட்சிப்படுத்தலுக்காக சில காட்சிகள் பயன் படுத்தியும் அவர்களையும் நடிக்க வைத்து இப்படத்தினை ஒரு தமிழ் தேசியபடமாக வெளிக் கொணர்ந்துள்ளார்கள். ஆனால் இப்படம் தேசியத்தினை அழிக்கக்கூடிய கருத்துக்களே வந்துள்ளது.

**இத்திரைப்படத்தின் கருவாக இறுதி யுத்தத்தின்போது ஒரு பங்கருக்குள் இருக்கும் ஒரு குடும்பத்தின் வாழ்வியலின் கதை என சொல்லப்பட்டது.**

மக்களின் உண்மையான வலிகளை இப்படத்தில் சரியாக பதிவு செய்யப்படவில்லை. இராணுவத்தால் மக்கள் பெரும் அளவில் கொல்லப்பட்ட உண்மையை பட்டவர்த்தனமாக தெரியப்படுத்தவில்லை. ஏறிகணை தாக்குதல் நடக்கும் போது இராணுவத்தின் செல்லா அல்லது புலிகளின் செல்லா என கதைத்ததை காட்சிப்படுத்தியது விடுதலைப் புலிகளின் எறிகணைகள் மக்களை தாக்கியதாக உலகை சந்தேகிக்க வைத்துள்ளது.

Reg-1430686-4
Email:thamileelaarasiyalthuraicanada@gmail.com +1-905-744-8282 +1-647-989-0552

பல முரண்பாடுகள், கருத்தியல் எதிர்மறை சித்தாந்தங்கள், மூலம் விடுதலைப்புலிகளின் இறுதி யுத்தத்தினை மக்கள் நிர்ப்பந்தத்தினாலேயே ஏற்றுக்கொண்டதாக ஒரு செய்தியும் பதிவுசெய்யப் பட்டுள்ளது. குண்டுச்சத்தம் சில காட்சியில் காட்டப்பட்டாலும். கருத்தாடல்கள் எமக்கு எதிராக காட்சிப் படுத்தப்பட்டுள்ளது. உண்மையில் நடந்த வலிகளையும் இழப்புக்களையும் தடயங்களையும் பதிவு செய்யவில்லை.

இராணுவத்தின் வேட்டுச்சன்னங்களை காட்டி சிட்டுக்குருவி செல்கிறது என ஒரு தாய் கூறும் வார்த்தைகள் மக்கள் இயல்பாக பயமற்று இருந்ததாகவே காட்டி யாரை இந்த உலகில் மீட்பர்களாகவும் நீதிவான்களாகவும் குறியீட்டுடன் காட்டி மகிழ்ந்துள்ளனர்.

எம் தமிழ் உறவுகளை குற்றப்பரம்பரை போல் காட்சிக்கு காட்சியாக சித்தரித்துள்ளனர், ஏனெனில் மக்கள் திருடுவதை பல இடங்களில் காட்டியும் மண்ணெண்ணை பரலினை காவலுக்கு நின்றவர் இறந்தவுடன் திருடியதாக காட்டியுள்ளனர்.

கனரக ஆயுதமாக 50 கலிபர் தாங்கிய ஜீப் மக்கள் குடியிருப்புக்குள் வருவதாகவும், அவ்வேளைகளில் இலங்கை இராணுவ எறிகணைகள் விழுந்து மக்கள் இறப்பதாகவும் காட்சிப்படுத்தியும், விடுதலைப் புலிகள் மக்கள் குடியிருப்புக்குள் ஓடுவதாக அவர்களின் காலணிகளின் சத்தத்தினை காட்டி அந்த வேளையில் இலங்கை இராணுவம் மக்கள் குடியிருப்பை தாக்குவதாக காட்டியுள்ளனர். மேலும் விடுதலைப் புலிகளின் எறிகணைகள் மக்கள் குடியிருப்புக்குள் இருந்து ஏவப்படுவது போலவும் காட்டுவது, சிறிலங்கா அரசினை சர்வதேச நீதி விசாரணையின் முன் பாதுகாப்பதற்காகவே காட்சிப்படுத்தியதாகவே எண்ணத் தோன்றுகின்றது.

விடுதலைப்புலி போராளி காயத்திற்கு பயப்படுவது போல காட்சியமைத்தமை போராளிகள் யுத்தத்தை விரும்பவில்லை என சொல்வதற்காகவே பல இடங்களில் யாருடைய செல் என வினா எழுப்பியமை, பங்கருக்குள் ஜேசு, சிவன், புத்தர் இவர்களில் புத்தரை பிரதானப்படுத்தி தமிழ் மக்கள் பௌத்த மதத்தினை தழுவியதாக காட்சிப்படுத்தியமை, தாயக நிலப்பரப்பை நரகம் என கூறி இனி இங்கே வர மாட்டோம் என கூறியமை, தேவிபுரத்திற்கு பின்னர் தமிழ் நாட்டுமக்களின் உதவிப்பொருட்கள் வரவில்லை. ஆனால் அதன் பின்னர் இந்திய அரசின் நிவாரணம் வந்ததாக காட்சிப்படுத்தியது. இந்திய அரசாங்கத்தையும் இறுதி யுத்தத் தொடர்பிலிருந்து பாதுகாக்கவே, சுதந்திரபுரத்துக்கு பின்னர் மக்கள் தமது அன்றாட வாழ்வை மரணத்துடன் மட்டுமே கழித்தனர். அப்போராளி உட்பட அக்குடும்பமும் திருமணத்தினை நடத்துவதை குறிக்கோளாக செயற்பட்டது மக்கள் யுத்தப்பதட்டம் இன்றி இயல்பாக இருந்ததையே காட்டி நிற்கின்றது.

விடுதலைப்போராட்டத்திற்கு போராளிகளை கொடுத்த மக்கள் மட்டும் அம்மண்ணில் நிற்பதாகவும், போராட்டத்துடன் தொடர்பற்றவர்கள் சிங்கள இராணுவ வலயத்துக்குள் செல்வதாகவும் காட்டி இறுதிவரை நின்ற மக்கள் தம் பிள்ளைகளை பாதுகாக்கும் நிர்ப்பந்தத்தில் நின்றதாக காட்டியுள்ளனர்.

# தமிழீழ அரசியல் துறை கனடா

## THAMILEELA ARASIYALTHURAI CANADA

Reg-1430686-4
Email:thamileelaarasiyalthuraicanada@gmail.com
+1-905-744-8282
+1-647-989-0552


போராளிகளால் கைவிடப்பட்டு காயமடைந்த மருத்துவப் போராளியாக நடித்த இயக்குனர் குப்பியையும் தகட்டையும் பங்கருக்குள் கழட்டி வைத்துவிட்டு வெளியில் சென்று இறந்த ஒருவரின் சேட்டை போட்டுவந்து சரணடைய செல்ல இருப்பதை காட்டியுள்ளார். சமநேரத்தில் பிள்ளைகளால் கைவிடப்பட்ட மூதாட்டியாக நடித்தவா் அக்குப்பியினை வாயில் வைத்து கடிக்கும்போது இவர் இக்குப்பி வேலை செய்யாது என கூற அவ் மூதாட்டி அக்குப்பியியை அசிங்கமாக துப்புகின்றார். இங்கே போராட்டத்தினால் கைவிடப்பட்ட போராளிகள் குப்பி கடித்திருக்கவேண்டும் என காட்சிப்படுத்துவதோடு வேலை செய்யாத குப்பியை போலியாக அணிந்ததாக காட்டியுள்ளார். இக்காட்சியியை நீக்கியதாக பொதுவெளியில் கூறிவிட்டு நீக்காமலே திரையிட்டுவருகின்றார்.

பாதுகாப்பு வலயம் என கூறி மக்களை சிறைப்படுத்தி அழித்து சிறிலங்கா அரசு செய்த இனப்படுகொலையை மறைத்து விடுதலைப்புலிகளின் செயற்பாட்டாலும் நகர்வுகளாலும் மக்கள் அழிந்ததாக காட்டி இலங்கை அரசை பாதுகாத்துள்ளர். இத்திரைப்படமானது இன அழிப்பு யுத்ததினை மறைத்து விடுதலைப்புலிகளையும் மக்களையும் மண்மீட்புப்போரையும். கொச்சைப்படுத்துவதற்காவே இத்திரைப்படத்தினை எடுத்துள்ளனர்.

**எனவே தமிழீழ விடுதலைப்போராட்டத்தின் அறத்திற்கு புறம்பாக எதிர்பரப்புரையாக வெளிவந்த இத்திரைப்படத்தை கண்டனம் செய்வதுடன் திரைப்படத்தினை தடை செய்கின்றோம். அடுத்த தலைமுறைக்கு சீரிய படைப் புக்கள் மட்டும் வெளிவர அரசியல்துறை பாடுபடும் என்பதை அறியத்தருகின்றோம்.**

-நன்றி-

பொறுப்பாளர்
தமிழீழ அரசியல்துறை கனடா